**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை - **திரு T. சோழவேந்தன்., B.A.B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2023-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் நாள் திங்கட்கிழமை

------

**இடைமனு எண். 11/2023 -ல் இடை மனு எண்.07/2023-ல்**

**அசல் வழக்கு எண்.232/2020**

1. அனிதா
2. மகேஷ் ..மனுதாரர்கள்/வாதிகள்

...எதிர்...

1. கருணாகரன்
2. மனோகரன்
3. இளங்கோவன்
4. இளவரசன், சார்பாக
   அவரின் அதிகாரம் பெற்ற
   முகவர் 6-ம் எதிர்வாதி கலையரசி மூலமாக
5. தமிழரசி
6. கலையரசி
7. சார் பதிவாளர், செம்பனார்கோயில் ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 17.07.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுந்தரய்யா அவர்களும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர்.ஆத்மநாதன் அவர்களும், 7-ம் எதிர்மனுதாரர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு எஸ்.முத்துகமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இடைமன எண்.7/2023-ல் திருத்தம் செய்ய அனுமதி கோரி இம்மனு உ.வி.மு.ச. கட்டளை-6, விதி-17-ன் படி மனு மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. <u>மனுவின் சுருக்கம்</u>

மனுதாரா்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் விளம்பல் பரிகாரம் கோரி அதில் இடைகால தடை உத்தரவு கோரி இடைமனு எண்.3/2020-ல் மனு தாக்கல் செய்து அதில் எதிர்மனுதார்கள் கட்சியாடி விசாரணைக்கு நிலுவையிலிருந்த நிலையில் இடைமனு எண்.3/2020 ஆனது முழு விசாரணை நடத்தாமல் 15.11.2022 அன்று Close செய்யப்பட்டுவிட்டது. மேற்படி Close செய்யப்பட்ட இடைமனு எண்.3/2020-யை Re-Open செய்ய இடைமனு எண்.7/2023-ல் மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. மேற்படி இடைமனு எண்.7/2023 தாக்கல் செய்யும்போது கவனக்குறைவாக இடைமனு எண்.3/2020 என்று தட்டச்சு செய்வதற்கு பதிலாக 2/2020 என்று கவனக்குறைவாக தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது. இது வேணுமென்றோ அலட்சியமாகவோ ஏற்பட்டதல்ல. அந்த மனுவை திருத்தம் செய்து கொள்ள வேண்டியது நியாயமாக உள்ளது. இல்லாவிடில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஏராள கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மேற்படி இடைமனு எண்.7/2023 ஆனது விசாரணை Close செய்து சொல்ல 11.04.2023 அன்று கெடு போடப்பட்டுள்ளது. இத்துடன் கொடுக்கும் திருத்த மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. எனவே இடைமன எண்.7/2023-ல் திருத்தம் செய்ய அனுமதி கோரி இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

2. <u>1 முதல் 6 எதிர்மனுதார்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணையின் சுருக்கும்.</u>

இந்த மனு சட்டப்புடியும், நியாயப்படியும் சரியல்ல. அசல் வழக்கானது விசாரணைக்கு தயாராகி உள்ள நிலையில் இடைமனுவை மீண்டும் மறு திறப்பு (Re-open) செய்து விசாரணை செய்ய வேண்டும் என மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்து அது இடைமனு எண்.7/2023 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு அதில் உத்தரவுக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் தற்பொழுது மீண்டும் மறு திறப்பு (Re-open) மனு இடைமனு எண்.7/2023-யை மறு திறப்பு (Re-open) செய்யவும் இடைநிலை மனு எண்.7/2023 மனுவும் திருத்தம் செய்ய திருத்த மனுவும் தாக்கல் செய்திருப்பது ஏற்க கூடியதல்ல. அசல் வழக்கு விசாரணைக்கு தயார் நிலையில் உள்ளதால் இடைநிலை மனு (Re-open) செய்யவும், (Re-open) மனுவை (Re-open) செய்யவும் திருத்தம் செய்யவும் அவசியம் இல்லை. எனவே மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. **இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை**

மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. **தீர்வு**

மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் விளம்பல் பரிகாரம் கோரி அதில் இடைகால தடை உத்தரவு கோரி இடைமனு எண்.3/2020-ல் மனு தாக்கல் செய்து அதில் எதிர்மனுதாரர்கள் கட்சியாடி விசாரணைக்கு நிலுவையிலிருந்த நிலையில் இடைமனு எண்.3/2020 ஆனது முழு விசாரணை நடத்தாமல் 15.11.2022 அன்று Close செய்யப்பட்டுவிட்டது என்றும், மேற்படி Close செய்யப்பட்ட இடைமனு எண்.3/2020-யை Re-Open செய்ய இடைமனு எண்.7/2023-ல் மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றும், மேற்படி இடைமனு எண்.7/2023 தாக்கல் செய்யும்போது கவனக்குறைவாக இடைமனு எண்.3/2020 என்று தட்டச்சு செய்வதற்கு பதிலாக 2/2020 என்று கவனகுறைவாக தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது என்றும், இந்த தவறானது வேணுமென்றோ அலட்சியமாகவோ ஏற்பட்டதல்ல என்றும், இந்த மனுவை திருத்தம் செய்து கொள்ள வேண்டியது நியாயமாக உள்ளது என்றும், இல்லாவிடில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஏராள கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடம் என்றும் மேற்படி இடைமனு எண்.7/2023 ஆனது விசாரணை Close செய்து சொல்ல 11.04.2023 அன்று கெடு போடப்பட்டுள்ளது என்றும், இத்துடன் கொடுக்கும் திருத்த மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது என்றும், எனவே இம்மனுவை மறுதிறப்பு (Re-open) செய்ய உத்தரவிடக்கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கானது விசாரணைக்கு தயாராகி உள்ள நிலையில் இடைமனுவை மீண்டும் மறு திறப்பு (Re-open) செய்து விசாரணை செய்ய வேண்டும் என மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்து அது இடைமனு எண்.7/2023 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு அதில் உத்தரவுக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், தற்பொழுது மீண்டும் மறு திறப்பு (Re-open) மனு இடைமனு எண்.7/2023-யை மறு திறப்பு (Re-open) செய்யவும் இடைநிலை மனு எண்.7/2023 மனுவும் திருத்தம் செய்ய திருத்த மனுவும் தாக்கல் செய்திருப்பது ஏற்க கூடியதல்ல என்றும், அசல் வழக்கு விசாரணைக்கு தயார் நிலையில் உள்ளதால் இடைநிலை மனு (Re-open) செய்யவும், (Re-open) மனுவை (Re-

open) செய்யவும் திருத்தம் செய்யவும் அவசியம் இல்லை என்றும், எனவே மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

6. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இம்மனுவானது இடைகால தடை உத்தரவு கோரி இடைமனு எண்.3/2020-ல் மனு தாக்கல் செய்து அதில் எதிர்மனுதாரர்கள் கட்சியாடி விசாரணைக்கு நிலுவையிலிருந்த நிலையில் இடைமனு எண்.3/2020 ஆனது முழு விசாரணை நடத்தாமல் 15.11.2022 அன்று Close செய்யப்பட்டுவிட்டது. மேற்படி Close செய்யப்பட்ட இடைமனு எண்.3/2020-யை Re-Open செய்ய இடைமனு எண்.7/2023 தாக்கல் செய்யும்போது கவனக்குறைவாக இடைமனு எண்.3/2020 என்று தட்டச்சு செய்வதற்கு பதிலாக 2/2020 என்று கவனகுறைவாக ஏற்பட்ட பிழையை திருத்தம் செய்ய அனுமதித்தால் பிரதிவாதிக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும் இந்த வழக்கில் இரு தரப்பையும் கேட்டு வழக்கை தகுதியின் அடிப்படையில் முடிவு செய்வதுதான் இயற்கை நீதியின் நலனுக்கும் உகந்ததாக இருக்கும் என்று கருதி மனுதாரா்களுக்கு ஒரு வாயப்பு அளிக்கும் விதமாக இம்மனுவை கீழ்கண்ட நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சணைக்கு தீா்வு காணப்படுகிறது.

முடிவாக மனுதாரா்கள் எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக ரூ.250/-யை 28.07.2023-ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிப்பட்டு உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 31.07.2023.

இந்த உத்தரவு என்னால் தட்டருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு ஜுலை மாதம் 24-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/- T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நிதிபதி,
சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

<u>மனுதாராகள்  தரப்பு சாட்சிகள்</u> - இல்லை-
<u>மனுதாராகள் தரப்பு சான்றாணங்கள்</u> - இல்லை-
<u>எதிர்மனுதாராகள் தரப்பு சாட்சிகள்</u> -இல்லை-
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> - இல்லை-

(ஓம்/- T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நிதிபதி,
சீர்காழி.

இடைமனு எண். 11/2023-ல்
இடை மனு எண்.7/2023-ல்
அசல் வழக்கு எண். 232/2020
நாள் - 24.07.2023.